**தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**

**- 2தீமோ 1 : 7**

கர்த்தருடைய ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அவருடைய ஆவி பயத்தின் ஆவி அல்ல. ஆனால் அதற்குமாறாக, அன்பினால் தூண்டப்பட்ட பலத்தின், சக்தியின் உற்சாகத்தின் ஆவி, அதாவது, அன்புள்ள தேவபக்தியும் அவரைப் பிரியப்படுத்தவும், அவருக்கு ஊழியம் செய்யவுமுள்ள ஒரு ஆசை, சத்தியத்துக்கு அன்புள்ள பக்தியும், தேவனுடைய ஜனங்களிடத்தில் அன்புள்ள பக்தியும் பரிசுத்த காரியங்களில் அவர்களை கட்டுவிக்க ஒரு ஆசையும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லா மனிதருக்கும் நன்மை செய்யவும் உள்ள அன்புள்ள ஆவிக்கொடுக்கபட்டிருக்கிறது. "தெளிந்த புத்தியுள்ள" ஆவியைக் கொடுக்கிறார். அதாவது, ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வார்த்தையினால் அதன் செய்யப்பட்ட பலப்படுத்தப்பட்ட ஒரு மனது. ஆகையால், முற்றிலுமாக மனிதருக்கு பயமில்லாதிருந்து, பிரதிஷ்டை செய்யப்பட்ட இருதயத்தினுள் அக்கினியைப் போல எரிகிற அன்பின் சக்தியை உபயோகிப்பதற்காக காலங்களையும் வேளைகளையும் முறைகளையும் நிதானிப்பதில் ஞானமாயிருக்கிறது.

**- Z ’97, 170 (R 2165).**

பயமுள்ள ஆவி ஒரு கோழையான குணமாயிருக்கிறது போல, பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவி வல்லமை, அன்பு, ஞானம் இவைகளின் குணமாயிருக்கிறது. அதாவது, ஒரு பலமுள்ள, அன்புள்ள, ஞானமுள்ள குணம், தேவன் தென்னுடைய ஆவி, வார்த்தை, பராமரிப்புகள் இவைகளினாலே கோழையான ஒரு குணத்தை நம்மைவிட்டு நீக்குகிறார். அதோடு, அதனால் அவருடையதற்கு ஒப்பான ஒரு குணத்தை நமக்குக் கொடுக்கிறார். அதில் ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவையாவும் அழகான இணக்கத்தில் ஒன்று சேர்ந்த்திருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு ஈவுக்காக தேவனுக்கு துதி உண்டாயிருப்பதாக!

**- P '30, 78.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யோசு 1:5-9; ரோம 8:15; ஏசா 51:12,13; அப் 1:8; 6:8; எபே 1:19,20; 1கொரி 1:24-28; 2கொரி 12:9; சங் 18:1; 31:23; யோவா 14:15,21,24; 13:34,35; 15:12-15,17; 1கொரி 13; மத் 7:24,25; 25:1-9; 15:121; 16:9; எபே 5:15-17; கொலோ 3:10,16; யாக் 3:13.

**கோபுர வாசிப்பு:** Z ’12, 279 (R 5093)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதற்கு வழி நடத்தின?